உ

சிவமயம்.

# சிவ வாக்கியம்.

(*)

இஃது

திருவாலங்காடு

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார்

அவர்களது

பூமகள்விலாச அச்சக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

சென்னை - திருப்பளிவீதி 21 - வது - செம்பர்

THANJAVUR MAHARAJA SERFOJI'S

1153

RAJAH SERFOGI'S SARASWATI



உ

சிவமயம்.

# சிவவாக்கியம்.

—)(*)(—

அகாரகாரணத்துளே யனேகனேகரூபமாய்
உகாரகாரணத்துளே யுருத்தரித்துநின்றனன்
மகாரகாரணத்துளே மயங்கிநின்றவையகம்
சிகாரகாரணத்துளே தெளிந்ததுசிவாயமே. ௧

ஆரியதோர்நமசிவாய மாதியந்தமானதும்
ஆறிரண்டுநூறுகோடி யளவிடாதமந்திரம்
தெரியநாலுவேதமாறு சாஸ்திரபுராணமுந்
தேடுமாலுமயனுஞ்சர்வ தேவதேவதேவனே. ௨

நமசிவாயமஞ்செழுத்து நிற்குநன்னிலைகளும்
நமசிவாயமஞ்சதேடு கூடுமவ்வெழுத்தையும்
நமசிவாயமஞ்சுபூத நாதமானவாறையும்
நமசிவாயவுண்மையை நமக்குநீசெய்நாதனே. ௩

நவ்விரண்டுகாலையாய் நவின்றமவ்வுவயிறதாய்ச்
சிவ்விரண்டுதோளதாய்ச் சிறந்தவவ்வுவாயதா
யவ்விரண்டுகண்ணதா யமர்ந்திருக்தகாரணஞ்
செவ்வியொத்துநின்றதே சிவாயமஞ்செழுத்துமே. ௪

சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துமுத்திசேரலாம்
சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துவானமாளலாம்
சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துஞானமசேரலாம்
சிவாயமஞ்செழுத்தையுந் தெளிந்துபாருமும்முளே.

பரமுனக்கெனக்குவேறு பயமுமில்லைபாரையா
சரமுனக்குறித்தமுங் குவித்திடக்கடமையைச்
சிரமுருககியமுதளித்த சீருலாவுநாதனே
புரமெனக்குநீயளித்த வுண்மையுண்மையுண்மையே.

அஞ்சுமூன்றுமெட்டதா யநாதியானமந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டு நூறுநூறுசெபிப்பிரேற்
பஞ்சமானபாதகங்க ளூறுகோடிசெய்யினும்
பஞ்சுபோற்பறக்குமென்று நான்மறைகள்பன்னுமே. ௭

சிவாயமென்றவட்சரஞ் சிவனிருக்குமட்சரம்
உபாயமென்றுநம்புவோருக் குண்மையானவட்சரங்
கபாடமிட்டவாசலைக் கடந்துபோகும்வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாயமஞ்செழுத்துமே. ௮

கல்லமஞ்சனங்கள்தேடி நாடியோடிமாய்கிறீர்
நல்லமஞ்சனங்களுண்டு நாட்டமாகவும்முளே
யெல்லைகண்டெடுத்துநீவி ரேகபூசைசெய்விரேற்
றில்லைமேவுசிவனுஞ் சிவனபதத்திலாகுமே. ௯

அறிவிலேபிறந்திருந்து மாகமங்களோதுவீர்
நெறியிலேநீரிருக்கு நேர்மையென்னநேர்மைகா
ணுறியிலேதயிரிருக்க வூர்புகுந்துவெண்ணெய்தே
டறிவிலாதமாந்தரோடு மணுகிவாழ்வதெங்ஙனே. ௰

இருக்குநாலுவேதமு மெழுத்தறவேயோதினும்
பெருக்கநீறுபூசினும் பிதற்றினும்பிரானிரா
னுருகிநெஞ்சையுட்கலந்த வுண்மைகூடவல்லிரேல்
சுருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே. ௰௧

மூலவட்டமீதிலே முளைத்தவஞ்செழுத்திலே
கோலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றதீ
ஞாலவட்டமன்றுளே நவின்றஞானிமேலதா
மேலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. ௰௨

அம்பலத்தையம்புகொண் டசங்கென்றாலசங்குமோ
கம்பமற்றபாற்கடல் கலங்கென்றாற்கலங்குமோ
வின்பமற்றயோகியை யிருளும்வந்தணுகுமோ
செம்பொனம்பலத்திலே தெளிந்ததேசிவாயமே. ௰௩

கானமுற்றகாட்டகத்தில் வெங்கெழுந்தநீறுபோல்
ஞானமுற்றநெஞ்சகத்தி னல்லதொன்றுமில்லையே
யூனமற்றசோதியோ டுணர்வுகொண்டடங்கினாற்
தேனகத்தினூறல்போற் றெளிந்ததுசிவாயமே. ௰௪

மனத்தகத்தழுக்கறாத மௌனயோகஞானிகள்
வனத்தகத்திருக்கினு மனத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்த மௌனயோகஞானிகண்
முலைத்தடத்திருக்கினும பிறப்பறுத்திருப்பரே. ௰௫

டேசுவானுமீசனே பிரமஞானமும்முளே
யாசையானவைவரு மலைந்தலைச்சல்படுகிறா
ராசையானவைவரை யடக்கியோரிடத்திலே
பேசிடாதிருப்பிராகி லீசன்வந்துபேசுமே. ௰௬

சாமநாலுவேதமுஞ் சகலசாஸ்திரங்களுஞ்
சேமநாலையோதினுஞ் சிவனைநீரறிக்கிலீர்
காமநோயைவிட்டுநீர் கருத்தொடுங்கவல்லிரே
லூனமற்றகாயமா யிருப்பனெங்களீசனே. ௰௭

வடிவுகண்டுகொண்டபெண்ணை மற்றொருவர்நத்தினா
ல், விடுவரொன்பராருயிரை வெட்டவேண்டுமென்பரே
நடுவன்வந்தழைத்தபோது நாறுமிந்தநல்லுடல்
சுடலைமட்டுங்கொண்டுபோய் தோட்டிகைகொடுப்பரே

இரண்டதொன்றுமூலமா யிரசசங்கத்துக்குளே
சுருண்டுமூலவளையமாய்ச் சுணங்குபோற்கிடந்ததில்
முரண்டெழுந்தசங்கினோசை மூலநாடிவூடுபோ
யரங்கபட்டணத்துளே யமர்ந்ததேசிவாயமே. ௰௯

வித்திலாதசம்பிரதாய மேலுமில்லைகீழுமில்லை
தச்சிலாதமாளிகை சமைந்தவாறதெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோதுதான் சிவனில்லையில்லையே. ௨௰

ஆடுகாட்டிவேங்கையை யகப்படுத்தும்வாறுபோன்
மாடுகாட்டியென்னைநீ மதிமயக்கமாகுமோ
கோடுகாட்டுமானையைக் கொனறுரித்தகொற்றவர்
வீடுகாட்டியென்னைநீ வெளிப்படுத்தல்வேண்டுமே.

உருதரித்தநாடிதன்னி லோடுகின்றவாயுவைக்
கருத்தினாலிருத்தியே கபாலமேற்றவல்லிரேல்
விருத்தர்களும்பாலராவர் மேனியுஞ்சிவந்திடும்
அருட்டரித்தநாதனாணை யம்மையாணையுண்மையே.

என்னகத்திலென்னைநா னெங்குமோடிநாடினே
னென்னகத்திலென்னையன்றியேதுமொன்றுகண்டிலே
ன், மின்னெழும்பிமின்னகத்தினமின்னொடுங்கும்வா
றுபோ, லென்னகத்துளீசனோடி யானுமில்லையில்லையே

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகிய நவின்றஞானபோதமாய்
ஞாலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சுளே தரித்ததேசிவாயமே. உ௪

முச்சதுரமூலமாகி மூன்றதானபேதமா
யுச்சதுரமும்முளே யடங்கவாசியோகமாம்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திரம் ஓம்நமசிவாயமே. உ௫

மூலமண்டலத்துளே முச்சதுரவாயமாப்
நாலுவாசலெண்விரலி னடுவுதித்தமந்திரங்
கோலியொன்றுமைந்துமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றதீ
மேலுமேலுநாடிலேன் விளைந்ததேசிவாயமே. உ௬

மூன்றுமண்டலத்துளே முட்டிநின்றதூணிலே
நான்றபாம்பின்வாயிலே நடுவுநின்றதீபமா
யீன்றதாயுமப்பனு மெடுத்துரைத்தமந்திரந்
தோன்றுமோரெழுத்திலே சொல்லவெங்குமில்லையே

ஐம்பதொன்றிலக்கர மடங்கவோரெழுத்திலே
விண்பரந்தமந்திரமும் வேதநான்குமொன்றலோ
வொண்பரந்தமூலமவ் வெழுத்துமவ்வெழுத்தைத்தரி
யங்கலிங்கபீடமா யமர்ந்ததேசிவாயமே. உ௮

வஞ்சகப்பிறப்பினை மனத்துளேதரித்துநீ
சஞ்செழுத்திலுண்மையை யறிகிலாதமாந்தரே

மஞ்சகப்பிறப்பினை வகைத்திடவும்வல்லீரே
அஞ்செழுத்தினுண்மையை யறிந்துகொள்ளலாகுமே.

இடங்கள்பண்ணிசுத்திசெய்தே யிட்டபீடமீதிலே
யடங்கநீரும்பூசைசெய் தருந்தவங்கள்பண்ணுவீர்
ஒடுங்குகின்றநாதனு ருதிக்குநாண்மெய்விட
மடங்குகின்றதெவ்விட மறிந்துபூசைசெய்யுமே. ௧௦

அட்சரமனாதியோ ஆத்துமமனாதியோ
புக்கிருந்துபூதமும் புலன்களுமனாதியோ
தத்துவமனாதியோ சதாசிவமனாதியோ
தக்கமிக்கநூல்களுஞ் சாத்திரமனாதியோ
மிக்கிருந்தஞானிகாள் விரித்துரைத்தல்வேண்டுமே ()

அக்கரமனாதியல்ல ஆத்துமமனாதியல்ல
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியல்ல
தக்கமிக்கநூல்களுஞ் சாத்திரமனாதியல்ல
ஒக்கநின்றுடற்கலந்த வுண்மைகாணனாதியே. ௧௨

புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்
செத்திடம்பிறந்திடம தெங்ஙனென்றறிகிலீர்
அத்தனையசித்தனையறிந்துநோக்கவல்லீரோ
உத்தமத்துளாயசோதி யுணரும்யோகமாகுமே. ௧௩

நாலுவேதமோதுவீர் ஞானமொன்று சொல்லுவீர்
பாலிலேநெய்கலந்த பான்மையையறிவீரோ

வாலமுண்டகண்டனு மகத்துளேயிருக்கையிற்
காலனென்றுசொல்லுவீர் கனவினுமக்கில்லையே. ௰௪

சாதியாவதேதடா சலந்திரண்டநீரலோ
போதுவாசமென்றலோ பூதமைந்துமொன்றலோ
ஓதும்வேதகீதமு மூணுறக்கமொன்றலோ
சாதியாவதென்பதேது சாவுவாழ்வுதிண்ணமே, ௰௫

அருளிலேபிறந்துதித்து மானரூபமாகியே
யிருளிலேதயங்குகின்ற வேழைமாந்தர் கேண்மினோ
பொருளிலேதவம்புனைந்து பொருந்திநோக்கவல்லிரே
ன்,மருளதேதுவன்னியின் மறைந்ததே;சிவ மே. ()

கருக்கலந்தகாலமே கண்டிருந்தகாரணா
வுருக்கலந்தபோதலோ வுனையானறிந்தனன்
திருக்கலந்தசோதியைத் தெளிந்துயானறிந்தபின்
னிருக்கிலேனிறக்கிலே னிரண்டுமற்றிருந்ததே, ௰௭

மௌனமானவஞ்செழுத்தை வாசியேறி மெல்லவே
வானெலாநிறைந்தசோதி மண்டலம்புகுந்தபின்
அவனுநானுமெய்கலந்தே யனுபவிக்குமளவிலே
யவனுமுண்டோநானுமில்லை யாருமில்லையானதே. ௰௮

கைவிடங்கள்கொண்டுநீர் கண்சிமிட்டிநிற்கிறீர்
செவ்விடங்கள்கொண்டுநீ ரென்றுமேசெபிக்கிறீர்
பொய்யடங்ககண்டனைப் பொருந்திநோக்கவல்லிரேன்
மையமர்ந்தகண்டனோடு மருவிவாழலாகுமே. ௰௯

பருத்திநூன்முருக்கிவிட்டு பஞ்சையோதுவஞ்சர்காள்
துருத்திநூன்முறுக்கிவிட்டுத் தூண்டியேறவல்லிரோ
கருத்தினோலையுங்கழன்று காலனோலையம்மகன்
எருத்தினால்தலைபடும்மி துண்மையுண்மை யுண்
மையே, ௪௰

தன்மசிந்தையாவளவுந் தவமறியாத்தன்மையாய்க்
கன்மசிந்தைவெயிலுழன்று கருத்தமிழ்ந்துகசடரே
ஜென்மஜென்மந்தேடியுந் தெளியொணாத செல்வனை
நன்மையாகவும்முளே நயந்துகாணவேண்டுமே. ௪௧

வானிலாததொன்றுமில்லை வானுமில்லையென்றிடில்
ஊனிலாததொன்றுமில்லை யூனுமில்லையுண்ணிடில்
நானிலாததொன்றுமில்லை நானுமில்லைநண்ணிடில்
தானிலாததொன்றுமில்லை தயங்கியாடுகின்றவே, ௪௨

கள்ளமுள்ளமேயிருக்க கடந்தஞானமோதுவீர்
கள்ளமுள்ளறுத்தபோது கதியிதன்றிக்காண்கிலீ
ருள்ளமேவிளக்கிநிந்த மொளியணுகவல்லிரேற
றெள்ளுஞானமும்முளே சிறந்ததேசிவாயமே. ௪௩

காணவேண்டுமென்றுகீர் கடன்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ வறிவிலாதமாந்தரே
வேணுமென்றவ்விசர்பாத மெய்யுளேதரிப்பிரேற்
றாணுவாகிநின்றசிவன் றான்சிவமதாகுமே. ௪௪

அணுவினோடகண்டமா யளவிடாதசோதியைக்
குணமதாகவும்முளே குறித்துநோக்கின் முத்தியாம்
பிணமிணென்றுவிரலையெண்ணி மீளொணாமயக்கமா
ய்த், துணிவிலாதபடியினாற்றொடர்ந்துபூசைசெய்கு
வீர். ௪௫

எச்சிலெச்சிலென்றுநீ ரிடந்திருக்குமேழைகாள்
துச்சிலெச்சிலல்லவோ தூயகாயமானதும்
வைத்தவெச்சிதேனலோ வண்டினெச்சில்பூவலோ
கைச்சுதாவில்வைத்துடன் கறந்தபாலுமெச்சிலே. ௪௬

தீர்த்தலிங்கமூர்த்தியென்று தேடியோடுந்தீதரோ
தீர்த்தலிங்கமுள்ளினின்ற சிவனைத்தெளியுமோ
தீர்த்தலிங்கமும்முளே தெளிந்துகாணவல்லிரேற்
தீர்த்தலிங்கந்தானதாய்ச் சிறந்ததேசிவாயமே. ௪௭

ஆடுகொண்டுகூடுசெய் தமர்ந்திருக்கும்வாறுபோற்
றேடுகின்றசெம்பினைத் திடப்படப்பரப்பியே
நாடுகின்றதம்பிரானு நம்முளேயிருக்கவே
போடுபத்ரபூசையென்னபூசையென்னபூசையே ௪௮

அன்னைகற்பகோளறைக்கு ளக்கினிப்பிரகாசமா
யவ்வறைக்குள்வெந்திடா வற்பவிந்துருபமாய்த்
தன்னையொக்குமென்றபோது கடையறுத்துவெளியி
தாய்த், நகுதிநல்லபெருமைதந்து தலைவனைவார்த்தநீ

என்னையற்பநேரமு மறக்கிலாதநாதனே
யேகனேயிறைவனே யிராஜராஜராஜனே
யுன்னையற்பநேரமு மொழிந்திருக்கலாகுமே
வுனதுநாட்டமெனதுநாவி லுதவிசெய்வீசனே ௫௰

எல்லையற்றுநின்றசோதி யேகமாவெறிக்கவே
வெந்தைபூரணப்பிரகாச ரேகபோகமாகிய
நல்லவின்பமௌனசா கரத்திலேயழுத்தியே
நாடொறுநவமிர்தமுண்டு நாணழிந்துநின்றநாள் ௫௧

அல்லிறந்து பாலிறந்த தீதுமிறந்துபோ
யண்டரண்டமுங்கடந்த நேகநேகரூபமாய்ச்
சொல்லிறந்துபொருளிறந்த சுகசொரூபவெளியிலே
சொல்லியாரவெண்ணினில்வேறுதுணைகளானவில்லையே

ஆனவாறதாயிடு மகண்டமானசோதியை
யூனைநாட்டியுமுளே யுகந்துகாணவல்லிரே
ஞானகாயமானவா மூலகபாரமானலாம்
வானநாடுமாளலாம் வண்ணநாடராணையே. ௫௩

இட்டகுண்டமேதடா வெரிவளர்ப்ப * தேதடா
சுட்டமண்கலத்திலே சுற்றுநூல்களேதடா
முட்டிநின்றதூணிலே முளைத்தெழுந்த சோதியைப்
பற்றிநின்றதேதடா பட்டநாதபட்டரே ௫௪

---

* ஏதடா-தோழமை முன்னிலைப்பெயர்.

வித்தலுமணிதுலக்கி நீடுமூலைபுக்கிருந்து
கத்தியேகதறியே கண்கணைமூடியென்பயன
எத்தனைபேரெண்ணினு மெட்டிரண்டுபத்தலோ
வத்தனுக்கிதேற்குமோ வறிவிலாதமாந்தரே, ௫௫

பாங்கினோடுபத்மவா சனத்திருந்துபார்த்தனன்
ஓங்கிநாடியேயிருந்தேயுச்சரிக்குமந்திரம், ஆங்கில்வெ
ட்டிநாருரித்து பூச்சையொட்டி யுண்மினா, ஞயந்தநூ
லிதொன்றுமே யறிந்துணர்ந்துகொண்மினே. ௫௬

அருக்கனோடுசோமனு மதற்குமப்புறத்திலும்
நெருக்கியேநுதாரகை நெருங்குமோரகத்திலே
பரப்பிலாதவெளியிலே பரத்தைநாடியூடுபோ
யிருக்கவல்லவர்க்கலோ விணிப்பிறப்பதில்லையே, ௫௭

ஆவதும்பரத்துளே யழிவதும்பரத்துளே
போவதும்பரத்துளே புகுவதும்பரத்துளே
தேவரும்பரத்துளே திசைகளும்பரத்துளே
யாவரும்பரத்துளே யியானுமப்பரத்துளே. ௫௮

எட்டிரண்டுகூடியே யிலிங்கமானதேவனை
மட்டதாகவும்முளே மதித்துநோக்கவல்லிரேற்
கட்டமானபிறவியின் * கருங்கடல்கடக்கலா
மிட்டமானவெளியினோ டிசைந்திருப்பீர்காண்மினே,

---

* கருங்கடல்வலித்தல்விகாரம்.

உண்மையானமந்திர மொளியிலேயிருந்திடில்
தன்மையானமந்திரஞ் சமைந்தரூபமாகியே
வெண்மையானமந்திரம் விளைந்துநீறதானதே
யுண்மையானமந்திர மதொன்றுமேசிவாயமே. ௯௰

பன்னிரண்டுநாளிருத்திப் பஞ்சவண்ணமொத்திட
பின்னியவ்வெளிக்குணின்று மேவொடுத்தமர்ந்தது
சென்னியானதலத்திலே சிவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமாவரே ௯௧

தச்சிவாயிலுச்சிமேலாயிரத் தலங்களாய்
பூச்சுடருமூவிரண்டு மூண்டெழுந்ததீச்சுடர்
வச்சிரமதாகியே வளர்ந்துநின்றதவ்விடம்
இச்சுடருமிந்திரியமு மேகமானதெங்ஙனே, ௯௨

எளிதினங்குகாணலாகு மெம்பிரானிருப்பிடம்
அழிவிலாதுநின்றதே அகாரமும்உகாரமுங்
குளிகையானசோதியுங் குலாவுகின்றதவ்விடம்
வெளியதாகுமொன்றிலே விளைந்ததேசிவாயமே ௯௩

ஆதியந்தமூலவிந்து நாதமைந்தெழுத்துமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமைந்துபூதமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமேநின்றதே
ஆதியந்தமூலவிந்து நாதமேசிவாயமே. ௯௪

மூன்றிரண்டுமைந்துமாய் முயன்றெழுந்த தேவராய்
மூன்றிரண்டுமைந்தமா முயன்றதேயுலகெலா
மீன்றதாயுமப்பனு மியங்குகின்றநாதமும்
தோன்றுமோரெழுத்திலேனுடு சொல்லவேறுமில்லையே

அக்கரந்தவக்கிரத்தி லுட்கரந்தவக்கரந்
சக்கரந்துசவ்வையுண்டு சம்பளத்திருந்ததீ
வெட்கரந்தவெண்ணெய்போல வெவ்வெழுத்து மெம்பி
ரா, னுட்கலந்துநின்றநேர்மை யாவர்காணவல்லிரே()

தெட்டெழுத்தின்வட்டமே நிறைந்தபல்லி யோனி
யும், நெட்டெழுத்தின் வட்டமொன்றி னின்றதொன்
றுங்கண்டிலே, னெட்டெழுத்திரண்டுமே யிலங்குமா
குமாதலால், நெட்டெழுத்தின்வட்டமன்றி நேர்படா
ததீசனே, ௯௭

அரியுமாகியயனுமாகி யண்டமெண்டிசையுமாய்ப்
பெரியனாகியுலகினிற் பெயர்ந்தபாதமொன்றலோ
வுருவுகண்டுவேறுசெய்து வேடமிட்டமூடரே
யுருவினூடன்றுதேவர்களுந் மொன்றதாகுமும்முளே

முத்திசித்திதொந்தமாய் முயங்குகின்றமூர்த்தியை
மற்றுதிக்கவைம்புலன்க ளாசுமத்திமப்புலன்
அத்தனித்தகாளகண்ட ரன்பினாலனுதின
முச்சரித்துளத்திலேயறிந்துணர்ந்துகொண்மினே ()

சுக்கிலத் துளியே சுரோணிதக்கருவுளே
முச்சதுரவாசலின் முளைத்தெழுந்தமோட்டினின்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திரமதொன்றுமேசிவாயமே. ௭௰

வேணுமென்றஞானமும் விரும்புகின்றநூலிலே
தாணுவுண்டங்கெனகிறீர் தரிக்கிறீர்மறக்கிறீர்
தாணுவென்றமூலநாடி தன்னுணுடியும்முளே
காணுமன்றிவேறியாவுங் கண்மயக்கமொக்குமே. ௭௧

வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளேதவிக்கிறீ
ருழக்கலாதநாழியான வாறுபோலுமூமைகாள்
முழக்குநாலுநாழியான வாறுபோலும்முளே
வழக்கிலேயுரைக்கிலீர் மனத்துளீசன்மன்னுமே. ௭௨

உதித்தெழுந்ததெவ்விட மொடுங்குகின்றதெவ்விடம்
மதித்தஞானமெவ்விட மடங்குகின்றதெவ்விடங்
கதித்தசிவனெவ்விடங் கண்ணுறக்கமெவ்விடம்
விதிக்கவல்லஞானிகாள் விரித்துரைக்கவேண்டுமே.

அண்ணலாரநாதியா நாதிமுன்னநாதியாய்ப்
பெண்ணுமாணுமென்றலோ பிறப்பதாகுமுன்னலாய்

கண்ணிலாணிசுக்கிலங் கருத்தொடுங்கிநின்றபின்
மண்ணுளோரும்விண்ணுளோரும்வந்தவாறதெங்ஙனே

நினைப்பதொன்றுங்கண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்புமாகி நின்றமாயமாயையே
யனைத்துமாயகண்டமா யனாதிமுன்னதாகியா
முனைக்குநானெனக்குநீநினைக்கும்வாறதெங்ஙனே. ௭௫

அணுப்பிறந்தகண்டமா யான்றவன்னியோனியாய்
மனுப்பிறந்துசெய்துவைத்த நாலினூன்மயக்குவீர்
சனிப்பதேதுசாவதேது தாவரத்தினுட்பொரு
ளினைப்பதேதுநிற்பதேது நீருணர்ந்துகூறுமே. ௭௬

எத்திசைக்குமெவ்வுயிர்க்குமெங்களப்பனெம்பிரான்
முத்திஞானவித்துளே முளைத்தெழுந்தசெஞ்சுடர்
சித்தினிற்றெளிந்தபோது தேவர்கோயிற்சேர்ந்தன
னத்தனுடல்கண்டபோ தடங்கியாடலுற்றதே. ௭௭

அங்கலிங்கபீடமும் மகவைமூன்றெழுத்தினுஞ்
சங்குசக்கரத்தினுந் தரித்தவெண்கரத்தினும்

பங்குகொண்டசோதியும் பரந்தவாயுவைந்தினுஞ்
சிங்காதவினையுஞ் சிவாயமல்லதில்லையே. ௭௮

நீளவீடுகட்டுவீர் நெடுங்கதவுசாத்துவீர்
வாழவேணுமென்றலோ மகிழ்ந்திருந்தமாந்தரே
காலனோலைவந்தபோது கைகலந்துநின்றிடும்
ஆலமுண்டகண்டராணை யம்மையாணையுண்மையே.

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யினோடுபொய்யுமாய்
மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருந்தமாந்தர்கா
ளோடுபெற்றநம்பர்கையி லோலைவந்தழைத்தபோ
தோடுபெற்றவில்லபதும பெறாதுகாணவ்வுடலமே. ௮௰

ஓடமுள்ளபோதெலா மோடியேயுலாவலாம்
ஓடமுள்ளபோதெலா முறுதிபண்ணிக்கொள்ளலாம்
ஓடமுமுடைந்தபோ தொப்பிலாதவெளியிலே
யாளுமில்லைகோலுமில்லை யாருமில்லையானதே. ௮௧

வல்லவாசலொன்பது மருத்தடைத்தவாசலுஞ்
சொல்லும்வாசலோரைந்துஞ் சொல்லவிம்மிநின்றதும்

நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோ
யெல்லைவாசல்கண்டபின் னினிப்பிறப்பதில்லையே. ௮௨

ஆதியானதொன்றுமே யனேகரூபமாயமாய்ச்
சாதிபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆதியோடுகூடிமீண் டழுந்துஜன்மமானபின்
சோதியானஞானியாருஞ் சுத்தமாயிருப்பரே. ௮௩

மலர்ந்ததாதுமூலமாகி வையகமலர்ந்ததும்
மலர்ந்தபூகுவிந்தபோது மயக்கம்வந்தடுத்ததும்
புலன்களைந்துபொறிகலங்கிப் பூமிமேல்விழுந்ததும்
இணங்கலங்கின்றமாய மென்னமாயமீசனே. ௮௪

வண்டுபூமணங்களோடு வந்திருந்ததேனெலாம்
உண்டுளேயடங்குவண்ண மோதுலிங்கமூலமாய்க்
கண்டுகண்டுவேரிலே கருத்தொடுங்கவல்லிரேற்
பண்டுகொண்டவல்வினை பறந்திடுஞ்சிவாயமே. ௮௫

ஓரெழுத்துலிங்கமாக வோதுமக்கரத்துளே
யோரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்

மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்துநாவுளே நவின்றதேசிவாயமே. ௮௬

தாராதாரதாரமுந் தொடர்ந்தெழுந்ததாரமும்
பாரபாரபாரமென்று பரிந்திருந்தபாவிகாள்
நேரநேரநேரமு நினைந்திருக்கவல்லிரேல்
தாரதாரதாரமுந் தொடர்ந்துகூடலாகுமே. ௮௭

குண்டலங்கள்பூண்டுநீர் குளங்கடோறுமூழ்குநீர்
மண்டுகங்கள்போலநீர் மனத்தின்மாசறுக்கிலீர்
மண்டையேந்துங்கையரை மனத்திலேநினைத்தபோது
பண்டைமாலயன்றொழப்பணிந்துவாழலாகுமே ௮௮

நாடிநாடிநாதனை நயந்துபாருமும்முளே
யோடியோடிமீளுவாரை யும்முளேயடக்கிலீர்
தேடிமேவுகாலனுந் திகைத்துநின்றுபோய்விடுஞ்
சோடிகோடிகாலமுங் குறைவிலாதிருப்பரே. ௮௯

செய்யநீடுதெங்கிளநீர் சேர்ந்தகாரணங்கள்போ [ன்
லையன்வந்தேயெனனுளம் புகுந்துகோயில்கொண்டனன்

மெய்யன்வந்தநெஞ்சில்வாழ்க வேண்டியேயுரைத்தபி
வையகத்துமாந்தர்முனனே வாய்திறப்பதில்லையே [ன்

பூதிபூசையென்றுநீ பூசைசெய்யும்பேதைகாள்
பூதிபூசையென்னிலும் பூசைகொண்டதெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வநாதிபூசைகொண்டதோ
ஏதுபூசைகொண்டதோ வின்னதென்றியம்புவீர். ௬௧

கூடுகட்டிமுட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோ
லாடிரண்டுகன்றையீன்ற வம்பலத்துளாடுதே
மாடுகொண்டுவெண்ணெயுண்ணு மானிடப்பசுக்களே
வீடுகண்டுகொண்டபின்பு வெட்டவெளியுங்காணுமே

உடம்புயிரெடுத்ததோ வுயிருடம்பெடுத்ததோ
உடம்புயிரெடுத்தபோ துருவமேதுசெப்பிடும்
உடம்பிறந்துபோயின் முயிரிறப்பதில்லையே
யுடம்புமெய்பிறந்ததான முண்மைஞானஞ்சொல்லடா

உள்ளதோபிறப்பதோ வுயிர்ப்படங்கிநின்றிடும்
மெள்ளவந்துகிட்டிநீர் வினவவேணுமென்கிறீர்

ருள்ளதும்பிறப்பது மொத்தபோதுநாதமாய்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாந்தரே. ௬௪

உயிரிருந்ததெவ்விட முடம்பெடுப்பதன்முனே
யுயிரதாவதேதடா வுடம்பதாவதேதடா
வுயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதேதடா
வுயிரினுடம்பெடுத்த வுண்மைஞானஞ்சொல்லடா.

உயிர்பரத்தினின்றிடு முடம்பெடுப்பதன்முனம்
உயிரகாரமாய்விடு முடம்பகாரமாய்விடும்
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதச்சிவம்
உயிரினுலுடம்பெடுத்ததொத்தவாறுகாண்மினே. ௬௬

இல்லையைக்கடந்துநின்று தெண்டனிட்டவாயுவி
னெல்லையைக்கடந்துபோ யிமைப்பதுமறிவிரோ
இல்லையைக்கடந்துநின்ற செடிதலோகவெளியிலே
வெள்ளையுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே. ௬௭

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதல்லநின்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசலாவதொன்றதல்ல

மருவுவாசியுற்றகங்க மத்தநாடியுற்றதல்ல
வரியதாசநின்றநேர்மை யாவர்காணவல்லிரே. ௪௮

மந்திரங்கள்கற்கிறீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றநீர் மரித்தபோதுசொல்விரோ
மந்திரங்களுமமுளே மதிக்கநீருமும்முளே
மந்திரங்களாவது மனத்திலைந்தெழுத்துமே. ௪௯

சங்கிரணதாரையொன்று சின்னபின்னலானதும்
மங்கிமாண்டுலகெலா மாண்டுலைந்துபோனதுஞ்
சங்கிரண்டையுந்திறந்து தாரையூதவல்லிரேற்
கொங்கைமங்கைபாகனோடு கூடிவாழலாகுமே.

எங்குமுள்ளவீசனா ரெம்முடம்புகுந்தபின்
பங்குகூறுபேசுவார் பாடுசென்றணுகிலா
ரெங்கடெய்வமுங்கடெய்வ மென்றுபேதமுள்ளதோ
வுங்கள்பேதமன்றியந்த வுண்மைபேதமில்லையே. ௫

சிவவாக்கியர்பாடல்

முற்றுப்பெற்றது.

---